
அரசியற் சிந்தனை நூல்வரிசை - 03



# நினைவு கூர்தல் – 2017

நிலாந்தன்

வெளியீடு: சமூக விஞ்ஞான ஆய்வுமையம்

# முன்னுரை

அரசியல் சிந்தனை வரிசையில் மூன்றாவது நூலாக நிலாந்தனின் "நினைவுகூர்தல் - 2017" என்ற நூல் வெளி வருகின்றது. வாசகர்கள் முதலாவது, இரண்டாவது நூல்களுக்கு சிறந்த ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர். இவ் ஒத்துழைப்பு எம்மை மகிழ்ச்சியூட்டுவதோடு வலுவான உற்சாகத்தையும் தந்துள்ளது. தொடர்ந்தும் இவ் ஒத்துழைபினைத் தருமாறு வேண்டுகின்றோம்.

இன அழிப்பின் போது மரணமடைந்தவர்களை நினைவு கூர்தல் ஒரு கூட்டுரிமையும் கூட்டுப்பொறுப்புமாகும். தமிழ் மக்கள் இந்த இரண்டிற்கும் உரித்துடையவர்கள். இவற்றை தட்டிக்கழிப்பதோ, தவறவிடுவதோ தமிழ் மக்களுக்கு ஏற்ற தல்ல. இவ் நினைவு கூர்தல்மூலம் தான் நீண்டகாலமாக ஆழப்பதிந்துள்ள கூட்டுமனக் காயத்தையும் ஆற்றுப்படுத்த முடியும்.

நிலாந்தன் நினைவு கூர்தல் தொடர்பாக தனது கருத் துக்களை வலிமையாக இந்நூலில் பதிந்திருக்கின்றார். இதனை அடிப்படையாக வைத்து நாமும் விவாதங்களை நடாத்துவோம்.

வாசகர்கள தமது கருத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம். அக்கருத்துக்கள் எமது பணிகளை மேலும் செம்மைப்படுத்துவதற்கு உதவுவதாக அமையும்.

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

# நினைவு கூர்தலை ஒரு பொதுசன நிகழ்வாக ஒழுங்குபடுத்துவது யார்?

வடமாகாணசபை முள்ளிவாய்க்கால் நினைவுநாளை அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. கடந்த ஆண்டைப் போலன்றி இவ்வாண்டு அது ஒரு பொதுசன நிகழ்வாக அமையுமென்று சம்பந்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனியொரு நினைவு கூரலுக்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. திருச்சபை வட்டாரங்களிலும் அப்படியொரு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஜனநாயகப் போராளிகள் அமைப்பும் தனியாக ஓர் ஏற்பாட்டைச் செய்கிறது.

தமிழ் மக்கள் பேரவை போன்ற கட்சியல்லாத ஒரு பொதுமக்கள் அமைப்பு நினைவு கூரலைப் பொறுப்பேற்றால் மேற்கண்டவாறு மூன்றுக்கு மேற்பட்ட தனித்தனியான நினைவு கூரல்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கலாம் என்று அரசியற் செயற்பாட்டாளர்கள் கருதுகிறார்கள். இது தொடர்பில் பேரவையோடும் உரையாடப்பட்டுள்ளது. மாகாணசபை அதைப் பொறுப்பேற்க முன்பென்றால் அது பற்றி யோசித்திருக்கலாம். ஆனால் மாகாணசபை தான் நடத்தப்போவதாக அறிவித்த பின் பேரவை அதில் தலையிடுவது சரியல்ல என்று அபிப்பிராயம் கூறப்பட்டுள்ளது. வடமாகாண சபைக்குள்ளும் எல்லா உறுப்பினர்களும் இதில் சம்பந்தப் படுவதாக தெரியவில்லை. மிகச் சிலரே இது தொடர்பில் ஈடுபாட்டோடு காணப்படுகிறார்கள். கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பாக முதலமைச்சரோடு ஒரு சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது. ஒரு மாகாண சபை உறுப்பினரும், ஒரு முன்னாள் பிரதேச சபை உப தவிசாளரும், மட்டும் அதில் பங்குபற்றியிருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் அமைந்திருப்பது முல்லைத்தீவு மாவட்டத்தில் என்பதனால் அப்பகுதிக்குரிய அரசியல்வாதிகளே மே 18ஐ நினைவு கூருவதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்பதல்ல.

முள்ளிவாய்க்கால் எனப்படுவது ஈழத்தமிழர்களின் நவீன வரலாற்றைப் பொறுத்தவரை ஒரு இடப்பெயர் மட்டுமல்ல. ஒரு புவியியல் பதம் மட்டுமல்ல. அது ஒரு அரசியல் பதம். எனவே ஈழத்தமிழர்களின் அரசியலை முன்னெடுக்கும் எல்லாருக்கும் அதில் உரிமை உண்டு. அதை ஒரு மாவட்டத்திற்குரியதாக குறுக்கக் கூடாது.

இப்போதுள்ள நிலவரங்களின்படி இம்முறையும் நினைவு கூரல் ஒரு குடையின் கீழ் நிகழப்போவதில்லை என்றே தெரிகிறது. கடந்த ஆண்டு கிறிஸ்தவ நிறுவனங்கள் அதை ஒரு பொதுசன நிகழ்வாக ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் வட மாகாணசபை தலையிட்ட பின் அவர்கள் தங்களுடைய நிகழ்வை தனியாக வைத்துக் கொண்டார்கள். நினைவு கூர்தலுக்கான முதலாவது பொதுச் சிற்பத்தையும் அவர்களே உருவாக்கினார்கள். அந்த சிற்பம் ஒரு சிங்களப் பெண் சிற்பியால் உருவாக்கப்பட்டது.

இம்முறை கொல்லப்பட்டவர்களின் பெயர்களை கற்களில் பொறித்து ஒரு நினைவு கூர்தலை மதகுருமார் ஒழுங்கு செய்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட சிலரை சில தினங்களுக்கு முன் அரச புலனாய்வுத் துறையினர் விசாரித்திருக்கிறார்கள். நிலைமாறு கால நீதியின் கீழ் பாதிக்கப்பட்ட மக்கள் நினைவுச் சின்னங்களை நிறுவுவதற்கும், நினைவு கூர்வதற்கும், ஞாபகங்களைப் பேணுவதற்கும் உரித்துடையவர்கள் என்று கூறப்படுகின்றது. நிலைமாறுகால நீதியின் நான்கு பெரும் பிரிவுகளில் ஒன்றாகிய இழப்பீட்டு நீதிக்குள் இது பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. எனினும் நினைவு கூரலை ஒழுங்கமைக்க முற்பட்ட மேற்படி சிவில் சமூக செயற்பாட்டாளர்களை புலனாய்வுத் துறையினர் விசாரித்திருக்கிறார்கள்.

கடந்த 9ம் திகதி வடமாகாண சபையின் அமர்வு முடிந்தபின் நினைவு கூர்தலைப்பற்றிக் கூடிக் கதைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அன்று வேலையற்ற பட்டதாரிகள் மாகாண சபைக் கதவுகளை மூடி ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தால் அந்த சந்திப்பு நடக்கவில்லை. கடந்த ஆண்டு மாகாணசபையானது நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதற்கென்று ஒரு நிலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு

குழுவை நியமித்தது. அக்குழுவே நினைவு கூரலுக்கான ஏற்பாட்டுக் குழுவாகவும் செயற்பட்டு வருகிறது. சுமார் ஐந்து ஏக்கர் காணி இதற்கென்று பெறப்படும் என்றும் அதில் நினைவுச்சின்னங்கள் அமைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாண்டு நினைவு கூரலை எப்படி ஒரு பொதுசன நிகழ்வாக ஒழுங்குபடுத்துவது என்பது தொடர்பில் இது வரையிலும் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.இது தொடர்பில் முதலமைச்சர் மக்களையும் கட்சிகளையும் ஒன்றிணைந்து நினைவு கூரவருமாறு முன்கூட்டியே பகிரங்கமாக அறிவிப்பது நல்லது என்று நம்பப்படுகிறது. அவ்வாறு செய்யுமாறு அவரைக் கேட்கப் போவதாகவும் ஒரு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

நினைவு கூரலை ஒரு பொதுசன நிகழ்வாக ஒழுங்குபடுத்துவது என்றால் அதற்கொரு அரசியல் தரிசனம் வேண்டும். அவ்வாறான தரிசனம் இருந்தால் தான் அதை ஒரு மக்கள் மைய நிகழ்வாக சிந்தித்து திட்டமிடலாம். கடந்த ஆண்டு அவ்வாறான தரிசனங்களற்ற ஒரு வெற்றிடத்தில் நினைவு கூரல் ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்படவில்லை. மாகாணசபையின் நிகழ்வு அரசியல்வாதிகளின் உரைகளால் நிரப்பப்பட்டது. இம்முறை விக்கினேஸ்வரன் மட்டுமே பேசுவார் என்று கூறப்படுகிறது. அரசியல்வாதிகளின் உரைகளை நிறுத்துவதால் மட்டும் நினைவு கூரல் ஒரு பொதுசன நிகழ்வாகி விடாது. அதற்குமப்பால் சனங்களைத் திரட்ட வேண்டும். பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கையே அது பொதுசன நிகழ்வா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கின்றது. அதற்கு கிராம மட்டத்தில் வேலை செய்ய வேண்டும். அதன் பின் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதோடு உணவு அல்லது தாகசாந்தி ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

இதற்கு பணம் தேவை. அதாவது நினைவு கூரலை ஒரு பொது மக்கள் நிகழ்வாகச் செய்வதென்றால் அதற்கு ஒரு பட்ஜெட் தேவை. அதை முன் கூட்டியே முடிவெடுக்க வேண்டும். முதலில் எத்தனை பேரை திரட்டப் போகிறோம் என்பதை தீர்மானிக்க வேண்டும். அதற்குத் தேவையான

பணத்தை எப்படிப் பெற்றுக் கொள்வது என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். அதன்பின் வடமாகாண சபையின் போக்குவரத்து அமைச்சு தேவையான வாகன ஏற்பாடுகளை அறிவிக்க வேண்டும். இது விடயத்தில் வற்றாப்பளை அம்மன் உற்சவத்தின் போது கோவில் நிர்வாகமும், போக்குவரத்து சபையும் எப்படி ஒருங்கிணைந்து செயற்படுமோ அப்படி ஒரு ஏற்பாட்டை மாகாண சபையும் சிந்திக்க வேண்டியிருக்கும்.

வடமாகாண சபை நினைவு கூரலை ஒழுங்குபடுத்தும் என்று அறிவித்தால் மட்டும் போதாது. நினைவு கூரலுக்கான ஒரு சமூக உளவியலை படிப்படியாகக் கட்டியெழுப்ப வேண்டும். நினைவு கூரல் எனப்படுவது ஒரு நாள் நிகழ்வு அல்ல. அது ஒரு தொடர் நிகழ்வு. குறிப்பாக மே மாதம் தொடக்கத்திலிருந்து 18ம் திகதி வரை நினைவு கூரலுக்கான காலமாக அறிவிக்கப்பட வேண்டும். இக் காலப்பகுதியில் குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒரு பலமான காரணம் உண்டு.

நாலாங்கட்ட ஈழப்போரின் இறுதி மாதங்களில் ஏப்ரல் மாதத்தின் இறுதி வாரம் வரையிலுமான பொதுசன இழப்பு எண்ணிக்கை கிட்டத்தட்ட ஏழாயிரத்து ஐநூறு என்று அறிவிக்கப்பட்டது. அந்நாட்களில் அப்பகுதியில் இயங்கிய இரண்டு ஊடகங்களான புலிகளின் குரலும், ஈழநாதமும் ஏறக்குறைய அப்படியொரு எண்ணிக்கையைத்தான் கூறின. ஐ.நாவின் புள்ளி விபரங்களும் ஏறக்குறைய அதையொத்தவைதான். ஆனால் மே மாதத் தொடக்கத்திலிருந்து 18ம் திகதி வரையிலுமான காலகட்டத்தில் தான் உச்சமான உயிரிழப்புக்கள் நிகழ்ந்தன. இந்த எண்ணிக்கை பற்றி இது வரையிலும் சரியாகத் தெரியாது. ஐ.நாவின் ஓர் அறிக்கை மொத்த இழப்பு எண்ணிக்கை கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் என்று கூறுகிறது. மற்றொரு அறிக்கை அறுபதினாயிரம் என்று கூறுகிறது. இந்த தொகைகளிலிருந்து ஏழாயிரத்து ஐநூறைக் கழித்தால் வரும் தொகைதான் மே மாதத்தின் முதல் மூன்று கிழமைகளுக்குள்ளும் கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கையாகும்.

ஐ.நா அதன் அறிக்கைகளில் கூறப்பட்ட தொகையை எப்படிக் கணக்கெடுத்தது? என்று ஓர் ஐ.நா அலுவலரிடம் கேட்டேன். முன்னாள்

மனித உரிமைகள் ஆணையாளரான லூயிஸ் ஆர்பருடன் வேலை செய்த ஓர் ஒஸ்ரேலியரான அவர் பின்வரும் தொனிப்பட பதிலளித்தார். "இப்படிப் பட்ட போர்க்களங்களில் பிரேத அறைகள் இயங்கா விட்டாலும் வைத் தியசாலைகள் ஏதோ ஒரு மூலைக்குள்ளாவது இயங்குவது உண்டு. அங்கு பிரேதங்கள் வராவிட்டாலும் காயப்பட்டவர்கள் கட்டாயமாகக் கொண்டு வரப்படுவர். அவ்வாறு வரும் காயப்பட்டவர்களின் காயங்களின் பருமன், ஆழம் என்பவற்றை வைத்து இப்படிப்பட்ட காயங்களுக்கு இவ்வளவு தொகை இறப்பு விகிதம் இருக்கும் என்று ஒரு புள்ளி விபரம் பெறப்படு வதுண்டு. கடைசிக்கட்டப் போரில் கப்பல் மூலம் புல்மோட்டைக்கு கொண்டு வரப்பட்ட காயக்காரர்களை வைத்துப் பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் தான் இழப்பு விகிதத்தை நாங்கள் கணக் கிட்டோம்" என்று அவர் சொன்னார்.

நான் திரும்பக் கேட்டேன் "ஒருகட்டத்தில் வன்னிக்கு ஐ.சி.ஆர்,சி கப்பல்கள் வருவதும் நிறுத்தப்பட்டது. முள்ளிவாய்க்காலுக்கு கடைசி யாக மே 9ம் திகதி தான் கப்பல் வந்தது என்று அங்கு சேவையாற்றிய மருத்துவர்கள் கூறுகிறார்கள். அதன் பின் வன்னியிலிருந்து காயக் காரர்கள் மேலதிக சிகிச்சைக்காக வெளியுலகத்திற்கு அனுப்பப்படவில்லை. காயங்கள் புழுத்தும், அழுகியும் இறந்தவர்களே அதிகம். அக்காலப் பகுதியில் இறந்தவர்களைப் புதைத்தவர்களிற் பலரும் இறந்து போய் விட்டார்கள். முடிவில் 18ம் திகதிக்குப் பின்னரும் சாகாமலிருந்த வலிய சீவன்கள்தான் படைத்தரப்பால் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். இக்காலப் பகுதிக்குரிய புள்ளி விபரங்களை எங்கிருந்து பெறுவீர்கள்?" என்று அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார் "உங்களுடைய கேள்வி தர்க்கபூர்வமானது இப்போதைக்கு எந்த ஒரு புள்ளி விபரமும் இறுதியானதல்ல" என்ற தொனிப்பட.

இப்படிப் பார்த்தால் ஈழப்போரில் ஒப்பீட்டளவில் அதிக தொகை பொதுசனங்கள் கொல்லப்பட்ட காலப்பகுதி அதுவெனலாம். அதாவது பெருந்தமிழ்ப் பரப்பின் நவீன வரலாற்றில் தமது இன அடையாளத்திற்காக

அதிக தொகை மக்கள் கொல்லப்பட்டதும் குரூரமாக வதைக்கப்பட்டதும் அக்காலப் பகுதிக்குள்தான். எனவே தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் மிகக் கொடுமையான உத்தரித்த காலமாக மே 1லிருந்து 18 வரையிலுமான நாட்களைக் கூறலாம்.

இவ்வுத்தரித்த நாட்களை நினைவு கூரலுக்கான ஒரு கால கட்டமாக எடுத்துக் கொள்ளலாம். வடமாகாண சபை இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. எனவே அதற்கு ஒரு பொறுப்பு உண்டு. தன் அதிகாரத்திற்குட்பட்ட அரச அலுவலகங்கள், பள்ளிக்கூடங் களில் நினைவு கூரலை ஏற்கனவே தொடங்கியிருந்திருக்க வேண்டும். இது வெசாக் பண்டிகைக்காலம். எல்லா அரச அலுவலகங்களிலும் வெசாக் கூடுகளைக் காண முடிகிறது. 2009 மேக்குப் பின்னர் வடக்குக் கிழக்கில் நடக்கும் வெசாக் கொண்டாட்டங்களை தனிய மத அனுஷ்டாங்களாகப் பார்க்க முடியாது. அவை ஒரே நாடு ஒரே தேசம் என்ற கொள்கையின் கீழ் முன்னெடுக்கப்படும் படைத்துறை அரசியல் நடவடிக்கைகளின் ஒரு பகுதிதான்.

எனவேநினைவுகூர்தல்தொடர்பில்மாகாணசபையும்,ஓர்அரசியல் தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும். அதன்படி தனது கட்டுப்பாட்டிற்குள் வரும் அலுவலகங்களுக்கு நினைவு கூர்தலுக்கான உத்தியோக பூர்வ வழிகாட்டலைச் செய்திருக்கலாம். பள்ளிக்கூடங்களிலும் அதைச் செய் திருக்கலாம். உள்ளூர் ஊடகங்களை ஒத்துழைக்குமாறு கேட்டிருக்கலாம். ஊடகங்களில் தொடர்ச்சியாக இது தொடர்பான கட்டுரைகளை யும், கலைப் படைப்புக்களையும் பிரசுரிப்பதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கலாம். 18ம் திகதி ஒரு வேலை நாள். அந்நாளில் அரச ஊழி யர்கள் நினைவு கூரலில் பங்கேற்பார்களா? இது தொடர்பில் மாகாண சபை ஏதும் முடிவுகளை எடுத்திருக்கிறதா?

மானுடத்தின் ஒன்றுகூடலை பெருமெடுப்பில் ஒழுங்கு படுத்திய வர் மாகாண அமைச்சராக இருக்கிறார். அவர்தான் வைரமுத்துவை

வன்னிக்கு வரவழைத்து விழா எடுத்தவர். அவரைப் போன்றவர்களுடைய ஆற்றலை ஏன் மாகாண சபை பயன்படுத்தக்கூடாது?

இவ்வாண்டு வெசாக் கொண்டாட்டம் வடக்கில் முன்னரை விட அதிகரித்தளவில் களை கட்டியது. அந் நாட்களில் யாழ் நகரப்பகுதியிலும், அதை நோக்கி வரும் சாலைகளிலும் பயணம் செய்ய முடியாத அளவிற்கு ஜனத்திரள் பெருகிக் காணப்பட்டது. குறைந்த பட்சம் அதேயளவு தொகை ஜனங்களையாவது நினைவு கூரலுக்கு ஒன்று திரட்ட முடியுமா என்பது சந்தேகமே. பெருந்தமிழ்ப் பரப்பில் ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் பெருந்தொகைச் சனங்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட நாட்களை நினைவு கூரும் போது குறைந்தளவு எண்ணிக்கையானவர்களே அதில் கலந்து கொள்வது என்பது யாருடைய தோல்வி? தேர்தல் அரசியலில் நாட்டம் காட்டாத தமிழ் மக்கள் பேரவை போன்ற அரசியல் இயக்கங்கள் நினைவு கூர்தலை ஏன் கையில் எடுக்கக் கூடாது? அதற்கென்று ஒரு பொதுக்குழுவை ஏன் உருவாக்கக் கூடாது?

இது போல சிந்தித்து திட்டமிட்டால்தான் நினைவு கூரலை ஒரு பொதுசன நிகழ்வாக நடத்தி முடிக்கலாம். இல்லையென்றால் கட்சிக்கு ஒரு கூட்டம் நடக்கும். அமைப்பிற்கு ஒரு கூட்டம் நடக்கும். மத நிறுவனங்கள் தனியே கூட்டங்களை நடாத்தும். பல்கலைக்கழகங்கள் தனியே கூட்டங்களை நடத்தும். மக்கள்திரள் சிதறுண்டு போகும். ஒரு பொது இடத்தில், ஒரு பொது நேரத்தில் பெருந்திரளான மக்களைத் திரட்டி கொழும்பிற்கும், வெளியுலகத்திற்கும் வலிமையான ஒரு செய்தியைக் கொடுக்கும் விதத்தில் நினைவு கூரலை ஒரு மக்கள் மைய நிகழ்வாக நடத்துவது எப்பொழுது? அதை யார் செய்வது?

10.05.2017

கனடாவில் வசிக்கும் ஒரு தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒரு முறை சொன்னார் எமது டயஸ்பொறாச் சமூகம் எனப்படுவது "event based" ஆனது அவ்வப்பொழுது ஏதாவது ஒரு event- நிகழ்வு- வரும்பொழுது அதற்கு எதிர்வினையாற்றும். அந்த நிகழ்வு முடிந்ததும் அதை அப்படியே மறந்துவிடும். தாயகத்திலிருந்து யாராவது வந்தால் அவரைச் சுற்றி நின்று அவர் சொல்வதைக் கேட்கும். உடனடியாக உணர்ச்சிவசப்பட்டு உதவிக ளையும், வாக்குறுதிகளையும் வழங்கும். ஆனால் அவர் நாடு திரும்பிய பின் நாங்கள் வழமைபோல எமது அன்றாடக் காரியங்களுக்குள் எந்திர மாக மூழ்கி விடுவோம்" என்று.

அவர் கூறியது டயஸ்பொறாச் சமூகங்களுக்கு மட்டுமல்ல தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கும் பொருந்துமோ என்று கேட்கத் தோன்று கிறது. முள்ளிவாய்க்கால் நினைவு நாள், மாவீரர் நாள், ஜெனீவாக் கூட்டத் தொடர் போன்றவை தொடர்பிலும் இடைக்கிடை நாட்டில் நிகழும் தமிழர்களைப் பாதிக்கக் கூடிய திருப்பகரமான நிகழ்வுகளின் போதும் திடீ ரென்று விழித்தெழுந்து ஆரவாரிப்பதும் பின்னர் சிறிது காலத்தில் அதை அப்படியே மறந்து போய் விடுவதுமாகத்தான் முழுச் சமூகத்திலும் வாழ்க்கை முறை மாறிவருகிறதா?

குறிப்பாக தமிழில் சமூக வலைத்தளங்களின் செயற்பாடே அதிக பட்சம் "நிகழ்வு மைய" "விவகார மைய" போக்குத்தான் என்பதை விமர்ச கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு விடயத்தில் சாதிப்பது என்றால் அதன் இறுதி இலக்கை நோக்கி ஒரு வேட்டை நாயைப்போல கவனம் சிதறாது ஓட வேண்டும். அதே தியானமாக வாழ வேண்டும். ஆனால் சமூக வலைத் தளங்கள் அவ்வாறான தியானத் தொடர்ச்சியை அறுப்பதோடு அவ்வப் போது கவனத்தைக் கலைத்து அதாவது தியானத்தைக் கலைத்து ஏதோ ஒரு புதிய விவகாரத்தின் மீது கவனத்தைக் குவித்து விடுகின்றன. இவ்வாறு தொடர்ச்சியற்ற தெட்டம் தெட்டமான கவனக் குவிப்பு எனப்படுவது ஆக்க பூர்வமானது அல்ல என்பதே அறிஞர்களின் முடிவு ஆகும்.

இவ்வாறான நிகழ்வு மைய, அல்லது விவகார மையச் சமூகமாகக் தமிழ் மக்கள் காணப்படுவது எதைக் காட்டுகிறது? முதலாவதாக தமிழ் மக்கள் அந்நிகழ்வுக்குரிய காலப்பகுதியிலாவது பிரஞ்ஞையோடு இருக்கிறார்கள் என்பது. அதாவது நெருப்பு இப்பொழுதும் தணலாக கனன்றுகொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

இரண்டாவது தமிழ் மக்களை அவர்களைப் பாதித்த, பாதிக்கும் விவகாரங்களைக் குறித்து தொடர்ச்சியாக விழிப்போடு வைத்திருக்கவல்ல ஓர் அரசியல் வேலைத்திட்டமோ அல்லது அதற்கு வேண்டிய அரசியல் தரிசனமுடைய பலமான அமைப்போ, அதிகார மையமோ தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என்பது. அப்படியொரு அமைப்பு அல்லது மையம் இருந்தால் அது தமிழ் மக்களைத் தீர்மானிக்கும் எல்லா விவகாரங்களையும், நிகழ்வுகளையும் குறித்து ஓர் ஒட்டுமொத்தத் தரிசனத்தைக் கொண்டிருக்கும். அப்படியோர் அரசியல் தரிசனம் இருந்தால்தான் தமிழ் மக்களின் அடுத்தகட்ட அரசியலைக் குறித்த தெளிவான ஒரு வழிவரைபடமும் இருக்கும். அப்படியோர் ஒட்டுமொத்த அரசியல் தரிசனம் இருந்தால்தான் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அதற்கேயான முக்கியத்துவத்துடனும், அனைத்துலகப் பரிமாணத்துடனும், தீர்க்கதரிசனத்தோடும் திட்டமிடலாம்.

முதலாவதாக முள்ளிவாய்க்கால் நினைவு நாள் ஏன் முக்கியமானது ?

பெருந்தமிழ்ப்பரப்பின் நவீன வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய இழப்பு அது. ஆனால் உலக சமூகம் குறிப்பாக ஐ.நா.போன்ற உலகப் பொது மன்றங்கள் அதை ஓர் இனப்படுகொலை என்று இன்று வரையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அதை முதலில் ஓர் இனப்படுகொலை என்று நிறுவ வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லாத் தமிழ்த்தரப்புக்கும் உண்டு. அதை ஓர் இனப்படுகொலை என்று தீர்மானம் நிறைவேற்றிய வடமாகாணசபை உண்டு, தமிழக மாநில அரசும் உண்டு. அதற்கொரு கூட்டு உழைப்புத் தேவைப்படுகிறது. அவ்வாறு அது ஓர் இனப்படுகொலை என்று உலக மன்றத்தில் நிறுவப்படும் போது அது அனைத்துலக அரங்கில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஆகப் பெரிய ராஜிய வெற்றியாக அமையும். அதை அடித்தளமாகக் கொண்டு தமிழ் மக்கள் தமது அடுத்த கட்ட

அரசியலை இலகுவாக நகர்த்த முடியும். அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியே என்ற தடத்தில் தமது அரசியலை எடுத்துச் செல்ல முடியும்.

எனவே நடந்தது இனப்படுகொலைதான் என்று நிறுவுவதற்கான ஒரு போராட்டத்தின் ஒரு பகுதியாகவே நினைவு கூர்தலும் அமைய வேண்டும். நினைவு கூர்தலை ஏன் ஒரு விளையாட்டுப் போட்டிக்கூடாக செய்யக் கூடாது என்பதற்கான விடையும் இதுதான்.

இவ்வாறு இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான ஒரு போராட்டத்தின் ஒரு பகுதியே முள்ளிவாய்க்கால் நினைவு கூர்தல் ஆகும். இது முதலாவது.

**இரண்டாவது அதை எப்படி ஒழுங்குபடுத்துவது?**

மேற்கண்ட விளக்கத்தின் அடிப்படையில் தான் அது ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். அதாவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான உள்நாட்டு, வெளிநாட்டு நிலமைகளைக் கனியவைக்கும் ஒரு நிகழ்வாக அது திட்டமிடப்பட வேண்டும். தமிழ் மக்கள் தங்களுக்குரிய நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும் அரசியல் ரீதியாக பாதுகாப்புக் கவசங்களை உருவாக்கிக் கொள்வதற்கும், கடந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கும் முள்ளி வாய்க்காலை நினைவு கூர்ந்தேயாக வேண்டும். இப்படிப் பார்த்தால் நினைவு கூர்தல் எனப்படுவது ஒரு மாவட்டத்திற்குரியது அல்ல, ஒரு மாகாண சபைக்குரியது அல்ல, ஒரு கட்சிக்கோ, இயக்கத்திற்கோ உரியது அல்ல. அது முழுத்தமிழ்ப் பெரும்பரப்புக்கு மட்டும் உரியதும் அல்ல. அதற்குமப்பால் உலகு பூராகவும் இனப்படுகொலையை நினைவு கூரும் அல்லது அதற்கெதிரான நீதியைக் கோரிப் போராடும் எல்லாச் சமூகங்களுக்குமுரியது அது. எனவே அது அனைத்துலகப் பரிமாணம் மிக்கது. உலகு தழுவியது.

**இப்படி உலகு தழுவியதாக அதை ஒழுங்குபடுத்த ஓர் அதிகாரம் குறைந்த மாகாண சபையால் மட்டும் முடியுமா?**

இது விடயத்தில் வடமாகாண சபையிடம் ஒரு பொருத்தமான தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் பொறுப்பேற்று

ஒழுங்குபடுத்திய மூன்று நினைவு கூர்தல்களே இதற்குச் சான்றா–கும். வடமாகாண சபையால் எல்லாக் கட்சிகளையும், அமைப்புக்களையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வர முடியவில்லை. குறைந்தபட்சம் மாகாண சபைக்குள் உள்ள ஆளுமைகளையும், வளங்களையும் கூட ஒருங் கிணைக்க முடியவில்லை. அதற்குமப்பால் கிழக்கு மாகாண சபையை ஒருங்கிணைக்க முடியவில்லை. கூட்டமைப்புக்குள் உள்ள வளங்களை யும் ஒருங்கிணைக்கத் தெரியவில்லை. எனவே வடமாகாண சபை நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்துமிடத்து அது ஐக்கியப்பட்ட பெருமெடுப் பிலான ஒரு கூட்டு நிகழ்வாக அமையாது என்பதையே கடந்த மூன்று ஆண்டுகால அனுபவம் நிரூபித்திருக்கிறது.

இம்மாதம் முதல் வாரமே இது தொடர்பில் ஒரு கட்டுரை எழுத விருந்தேன். "நீங்கள் எழுதி இவர்கள் திருந்தப் போவதில்லை. எனவே மே தினக் கூட்டங்கள் பற்றிய கட்டுரையை எழுதுங்கள்" என்று மன்னார் பொதுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவகரன் சொன்னார். அக்கட்டுரையை போன வாரம் எழுதினேன். இம்முறை மாகாணசபை ஓரளவிற்கு அசைந்திருக்கிறது. போனவாரக் கட்டுரையில் சுட்டிக்காட்டப் பட்ட சில விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பெரும்பாலான ஏற்பாடுகள் மேலிருந்து கீழ் நோக்கிச் செய்யப்பட்ட வையே. கீழிருந்து மேல் நோக்கி மக்களை ஒன்று திரட்டுவதற்கு மிகப் பலவீன மான ஏற்பாடுகளே காணப்பட்டன.

நினைவு கூர்தலுக்கு முதல் நாள் இரவு முல்லைத்தீவு மாவட்டத் தைச் சேர்ந்த ஒரு மாகாணசபை உறுப்பினர் சொன்னார். "என்ன நடக்கிறது என்று எங்களுக்கே தெரியாது" என்று. அதே இரவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மாகாணசபை உறுப்பினர் சொன்னார் "ஒரு வாகனம் தரப்பட்டுள்ளது. ஆனால் அதில் வருவதற்கு இதுவரையிலும் எவரும் பெயரைப் பதிவு செய்யவில்லை" என்று. இவ்வாறான ஏற்பாடுகளின் விளைவாக ஆயிரத் திற்கும் குறைவானவர்களே மாகாணசபை ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டதை நினைவு கூரும் ஒரு நிகழ்வில் குறைந்தது ஆயிரம் பேரைக் கூட கூட்ட முடியவில்லை.

அதே சமயம் தமிழ் மக்கள் பேரவை நினைவு கூர்தலை முன்னெடுத்திருந்தால் எல்லாத் தரப்புக்களையும் ஓரணியில் திரட்டியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் அந் நிகழ்வில் தமிழரசுக்கட்சி இணையு-மா என்ற கேள்வி உண்டு. கடந்த மாதம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்க-ாக தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்த கடையடைப்பில் தமிழரசுக்கட்சி கலந்து கொண்டதை இங்கு சுட்டிக்காட்டலாம். கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் பேரவை சற்றுப் பிந்தியே செயற்பட்டிருக்கின்றது. பேரவை பல விடயங்களில் தாமதமாகவே முடிவெடுத்து வருகிறது. நிலமீட்புக்கான போராட்டங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டங்கள் போன்றவற்றில் பேரவை உரிய வேகத்துடனும் பொருத்தமான அரசியல் தரிசனத்திடனும் செயற்படவில்லை. நினைவு கூர்தல் விடயத்திலும் அதுதான் நடந்தது.

எனவே பேரவையும் உட்பட தமிழ் தேசியக்கட்சிகள், அமைப்புக்கள் என்பவற்றோடு இது தொடர்பில் சிந்திக்கும் கருத்துருவாக்கிகள், செயற்பாட்டாளர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் போன்ற அனைவரும் இணைந்து ஒரு பொதுக்குழுவை உருவாக்குவதே நினைவு கூர்தலை ஒரு குடைக்கீழ் கொண்டு வருவதற்கான ஒரே வழியாகும். அப்பொதுக்குழுவானது பெருந்தமிழ்ப்பரப்பில் தனக்கு ஆதரவான தரப்புக்களை உள்வாங்க வேண்டும். அதோடு உலகு பூராகவும் இனப்படுகொலையை நினைவு கூரும் சமூகங்களுடனும், இனப்படுகொலைக்கு எதிரான நீதியை கோரிப் போராடும் சமூகங்களோடும் தோழமையைப் பேண வேண்டும். அவர்களுடைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். இப்பொதுக்குழுவே நினைவு கூரலுக்கான பிரதேசத்தையும் வடிவமைக்க வேண்டும்.

கிடைக்கப்பெறும் தகவல்களின்படி நினைவு கூர்தலுக்கான ஒரு பொது நிலமாக சுமார் ஐந்து ஏக்கர் காணியைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அக்காணி கிடைத்தால் அதில் நினைவுச் சின்னங்கள் நிறுவப்படும். அந்நிலத்துண்டை அப்பகுதிக்குரிய பிரதேச சபை பராமரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அந்நிலத்துண்டை பிரதேசசபை பராமரிப்பது என்பது ஒரு நிர்வாக நடைமுறையாகும். ஆனால் நினைவு கூர்தலுக்கென்று ஒரு நிலப்

பகுதியை ஒதுக்குவதற்கும் அப்பால் இறுதிக்கட்ட போர் அரங்காகிய பொக்கனை, மாத்தளன் வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய கிரா மங்களோடு நந்திக்கடலையும் உள்ளடக்கிய ஒரு பிரதேசம் நினைவு கூர்தலுக் கான பிராந்தியமாக பிரகடனப்படுத்த வேண்டும். அங்கு இறுதிக்கட்டப் போரின் எல்லா ஞாபகங்களையும் ஆவணப்படுத்தும் ஏற்பாடுகள் உரு வாக்கப் பட வேண்டும். அப்பகுதிகளில் போரின் எச்சங்களாகக் காணப்படும் பொதுக் கட்டடங்களை நினைவுச் சின்னங்களாகப் பேண வேண்டும். எட்டு ஆண்டுகளின் பின்னரும் உக்கிப் போகாமல் மணலில் புதைந்து கிடக்கும் எச்சங்களை சேகரித்து ஒரு பொது இடத்தில் பேண வேண்டும். அப் பகுதிகள் சனச்செறிவு குறைந்தவை. அரச காணிகளை பெறுவது கடின மென்றால் தனியார் காணிகளை விலைக்கு வாங்கலாம். அதற்கு ஒரு பொது நிதியம் வேண்டும்.

ஒரு பொது நினைவுச் சின்னத்தை உருவாக்கும் போது உலகத் தரத்தைப் பேண வேண்டும். ஏற்கெனவே கிறிஸ்தவ மதகுருக்களால் உருவாக்கப்பட்ட சிற்பம் பொருத்தமானதாகத் தெரியவில்லை, நவீன மானதாகவும் தெரியவில்லை. ஒரு பொது நினைவுச் சின்னமானது தமிழ் மக்களின் கூட்டிழப்பை, கூட்டுத்துக்கத்தை, கூட்டுக்காயங்களை பிரதி பலிப்பதோடு தமிழ்த் தேசியத்தின் ஜனநாயகச் செழிப்பையும் தமிழ் அழகியல் உன்னதங்களையும் வெளிப்படுத்தும் ஒரு சின்னமாக அமைய வேண்டும். எனவே நினைவு கூர்தலுக்கான ஒரு பிராந்தியத்தை எப்படி வடிவமைப்பது அதை எப்படி ஓர் உயிருள்ள நூதன சாலையாகப் பேணு வது அதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு ஞாபகங்களை எப்படிக் கடத்துவது? போன்ற எல்லாவற்றையும் மேற்சொன்ன பொதுக்குழுவே தீர்மானிக்க வேண்டும். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நினைவு கூர் தலை முன்னெடுப்பதென்றால் இதுதான் ஒரே வழி. ஒரு பொதுக் குழுவை, ஒரு பொது நிதியத்தை உருவாக்குவது.

அது ஒரு தேசிய துக்கநாள் என்று பிரகடனப்படுத்தி விட்டு தாயகத்தில் அதை ஒரு தேசியத் துக்கமாக கடைப்பிடித்தது எத்தனை பேர்? அன்றைய நாளில் யாழ்ப்பாணத்தில் எல்லாமே வழமை போல் இயங்கின. முதலமைச்சர் கேட்டுக் கொண்டதைப் போல எல்லா அலு

வலகங்களிலும் அஞ்சலி செலுத்தப்படவில்லை. மாகாணசபை அலுவலகங்கள் பலவற்றில் கூட அஞ்சலி செலுத்தப்படவில்லை. ஆனால் அரச உயர் அதிகாரிகள் இம்மாதம் எட்டாந் திகதி பலாலியில் தேசியப் போர் வீரர்கள் நாள் நிகழ்வில் பங்கெடுத்திருப்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தில் முத்துத்தம்பி மகாவித்தியாலயம், இந்துக் கல்லூரி, புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயம் போன்ற சில பாடசாலைகளில்தான் நினைவு கூர்தல் நிகழ்ந்திருக்கிறது. கல்வியமைச்சர் அஞ்சலி நிகழ்வுகளில் பங்கெடுத்தால் மட்டும் போதாது. முழுக்கல்விச் சமூகத்தையும் அந்நிகழ்வுகளில் பங்கெடுக்க வைக்க வேண்டும்.

முள்ளிவாய்க்காலை நோக்கிச் செல்லும் பரந்தன் சாலையில் பரந்தன் நகரம் வழமை போல இயங்கியது. அதைத் தாண்டிச் செல்ல தர்மபுரத்திலும், விசுவமடுவிலும் வாழ்க்கை வழமைபோல் இருந்தது. உடையார் கட்டிலும் நிலமை ஓரளவிற்கு அப்படித்தான் இருந்தது. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய இரண்டு சிறிய பட்டினங்கள் தான் கடைகளைப் பூட்டி துக்கம் தெரிவித்தன. அப்படியென்றால் இது ஒரு மாவட்டத்திற்குரிய இரண்டு பட்டினங்களுக்குரிய துக்கம் மட்டுமா? ஒரு துக்க தினத்தை கடைப்பிடிப்பது எப்படி? அதிலும் குறிப்பாக அக்கூட்டுத் துக்கத்தை ஒரு கூட்டுக் கோபமாக சக்தி மாற்றம் செய்ய வேண்டிய ஒரு நிலையில் இருக்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம் ஒரு கூட்டுத் துக்கத்தை இப்படியா அனுஷ்டிப்பது? தமிழ்ச் சனத்தொகையில் பெருந்தொகையினர் இதில் சம்பந்தப்படாதவர்கள் போல ஒதுங்கி நின்றமை எதைக் காட்டுகிறது? முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது அது இனப்படுகொலைதான் என்பதை நிறுவுவதற்கான போராட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதை உரிய தரப்புக்கள் உணர்வது எப்பொழுது?

18.05.2017

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

# தமிழ் மக்களின் கூட்டுத் துக்கமும் கூட்டுக் கோபமும்! மாற்றத்தின் விரிவைப் பரிசோதித்தல்

தமிழ்ப்பெரும் பரப்பில் நவீன வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிர் இழப்பை கடந்த 5 ஆண்டுகளாக நாட்டுக்குள் வாழும் ஈழத்தமிழர்களால் நினைவு கூர முடியவில்லை. இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது மனித நாகரிகத்தின் மிக ஆதித் தொடக்கங்களில் ஒன்றாகும். இறந்தவர்களுக்கு மரியாதை செய்தல், மூதாதையரை வழிபடுதல், பூதவுடலுக்கு மரியாதை செய்தல் போன்றவை மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் பிரதான குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. மிருகங்களிடமிருந்து மனிதர்கள் துலக்கமாக வேறுபடும் இடங்களில் இதுவும் ஒன்று. சில மிருகங்கள் பறவைகளின் மத்தியில் இறந்த தமது இனத்தவரைச் சுற்றியிருந்து துக்கம் கொண்டாடும் சில நடைமுறைகளைக் காணமுடியும். ஆனால், மனிதர்களே அதனைச் சடங்காகவோ வழமையாகவோ பேணி வருகிறார்கள். மனிதன் நாகரீகமடையத் தொடங்கியதன் ஒரு முக்கிய குறிகாட்டியாக அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அப்படிப் பார்த்தால் அது ஓர் அரசியல் உரிமை மட்டுமல்ல, அது ஒரு பண்பாட்டுரிமையும் கூட.

மனித நாகரிகத்தின் ஆதித்தடங்களைத் தேடிச் சென்றால் மனித குலத்தின் முதலாவது நிரந்தரக் குடியிருப்புக்களில் ஒன்றாக கருதப்படும் ஹெற்றல்கியூக்கிலும், ஜெரிக்கோவிலும் மனிதர்கள் மூதாதையர்களை வழிபட்டிருப்பதைக் காணலாம். மனித நாகரிகமானது நதிக்கரைகளில் எண்ணோடும் எழுத்தோடும் கட்டியெழுப்பப்படுவதற்கு சில நூற்றாண்டுகளுக்கும் முன்னரே உருவாக்கப்பட்ட நிலையான குடியிருப்புக்கள் அவை. நீர்ச்சுனைகளை மையமாகக் கொண்டிருந்த அந்நிலையான குடியிருப்புக்களில் மூதாதையர் வழிபாட்டுக்குரிய சான்றாதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது, மனித

நாகரீககத்தின் ஆதித் தொடக்கங்களைக் கண்டுபிடித்த போது அங்கே இறந்த வர்களை மரியாதை செய்ததற்கான சான்றாதாரங்களும் காணப்பட்டன.

இறந்தவர்களை நினைவு கூர்வதைத் தடுப்பது நாகரீகமற்றது என்று நம்பியதாலேயே மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் அதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். குறிப்பாக சில ஆண்டு களுக்கு முன் ஒரு ஐரோப்பிய பிரதானி ஆனையிறவுக்கு அருகே மலர் வணக்கம் செலுத்தினார். அதைப் போலவே சில மாதங்களுக்கு முன்பு ஒரு அமெரிக்கப் பிரதிநிதியும் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று மலர்வணக்கம் செலுத்தியிருக்கிறார். இவைகள் யாவும் குறியீட்டு நடவடிக்கைகளே. ஆனால், தமிழ் மக்களுக்குத் தேவையாயிருப்பது குறியீட்டு நடவடிக்கைகள் அல்ல. மாறாக தமது கூட்டு உரிமையை உறுதி செய்யும் ஓர் அரசியல் சூழலே. அதற்கு வேண்டிய ஓர் அனைத்துலக அழுத்தமே. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அதை பின்னிருந்து பலப்படுத்தும் மேற்கு நாடுகள் முன்னைய ஆட்சி காலத்தில் அதை ஒரு குறியீட்டு நடவடிக்கையாகச் செய்தது என்பது வேறு. ஆட்சி மாற்றத் தின் பின்னரும் அப்படிச் செய்வது என்பது வேறு. மாற்றத்தைக் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஐயங்களையும் அச்சங்களையும் விரக்தியையும் போக்குவது என்றால் இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

நவீன தமிழ் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உயிரிழப்பை நினைவு கூர்வதற்கு 5 ஆண்டுகளுக்குப் பின்னராவது தமிழ் மக்கள் அனுமதிக்கப்படுவது என்பது மாற்றத்தின் மீது அவர்களுக்கு ஏதாவது ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தக் கூடும் என்பது மட்டுமல்ல பின்வரும் காரணங்களுக்காகவும் அது மிக அவசிய மானது.

இலங்கைத் தீவில் நல்லிணக்கத்தை நடைமுறைச் சாத்தியமான வழி யில் சிந்திப்பதற்கு அது ஒரு தவிர்க்கப்படவியலாத நுழைவுப் புள்ளியாக இருக்கும்.

அது ஒரு கூட்டுச்சிகிச்சை. வெளிப்படுத்தப்படாத கூட்டுத்துக்கமானது உளவியல் அர்த்தத்தில் தீங்கானது. கூட்டுக்காயங்களிலும், கூட்டு மனவடுக் களிலும் உழன்று கொண்டிருக்கும் ஒரு சமூகத்துக்குக் கூட்டு சிகிச்சை அளிப்

பது பற்றி சிந்திக்கும் எல்லா உள மருத்துவ நிபுணர்களும் இதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அதாவது, ஒரு சமூகத்தின் கூட்டுத்துக்கம் எவ்வளவுக்கு எவ்வளவு வெளிப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது சிகிச் சைக்கு உதவியாக அமையும் என்று.

அது ஒரு கூட்டுவழிபாடு. மத நம்பிக்கைகளுக்கூடாக சிந்திப்பவர்களை பொறுத்தவரை இது இறந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைவதோடு தொடர் புடையது. இறந்தவர்களுக்குரிய இறுதி கிரியைகளை அச்சமின்றி செய் வதன் மூலம் அந்த ஆத்மாக்கள் மட்டும் சாந்தியடைவதில்லை. அந்தத் துக்கத்தை அடைகாத்துக்கொண்டிருக்கும் அவர்களுடைய உறவுகளும் சாந்தியடை கிறார்கள் என்பது மதம் சார்ந்த ஒரு நம்பிக்கை.

அது தமிழ் மக்களின் கூட்டு உரிமைகளில் ஒன்றாக இருக்கிறது என் பதும் அதை மேற்கு நாடுகளும் இந்தியாவும் பகிரங்கமாக நிராகரிக்கத் தயாரில்லை என்பதும்.

அது ஒரு பண்பாடு. அதை ஏற்றுக்கொள்வது ஒரு அரசியல் நாக ரீகம். மனிதகுலம் நாகரீகம் அடைந்ததற்குரிய முக்கிய குறிகாட்டிகளில் ஒன்றாக இறந்தவர்களை மதித்தல் காணப்படுகிறது. எனவே, தமிழ் மக்கள் மத்தி யில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஈழப்போரில் கொல்லப்பட்டவர்களையும் காணாமல்போகச் செய்யப்பட்டவர்களையும் நினைவு கூர அனுமதிக்கப்படும் போது அது முழு இலங்கை தீவின் அரசியலையும் நாகரீகமடையச் செய்யும்.

இலங்கைத் தீவின் நவீன அரசியலில் அது ஒரு புதிய அரசியல் நாக ரீகத்தின் தொடக்கப்புள்ளியாகவும் அமையும்.

17.05.2015

நிலைமாறு கால நீதிப்பொறிமுறைகளின் படி, நினைவு கூர்தலுக்கான உரிமைக்கு அதிக அழுத்தம் உண்டு. நிலைமாறு கால நீதிப்பொறிமுறைக்குரிய நான்கு பெருந் தூண்களில் ஒன்று இழப்பீட்டு நீதி (Reparative Jusstice) ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பௌதீக மற்றும் உளவியல் உதவிகளை வழங்கி அவர்களை இழப்புக்களிலிருந்து தேற்றி எடுப்பதோடு அவர்களுக்கே உரிய மாண்பினை உறுதிப்படுத்துவது பற்றி இப் பிரிவின் கீழ் அறிவுறுத்தப்படுகிறது.

இப்பிரிவில் இழப்பீட்டு நீதியின் ஐந்து வகைகளுக்குள் நான்காவதாகக் கூறப்படுவது satisfaction – திருப்திப்படுத்துதல் ஆகும். அதாவது பாதிக்கப்பட்டவர்களைத் திருப்திப்படுத்துவது என்று பொருள்.

பின்வரும் வழிகளில் பாதிக்கப்பட்டவர்களைத் திருப்திப்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. அவையாவன

1. மனித உரிமை மீறல்கள், துஷபிரயோகங்கள் போன்றவற்றை நிறுத்துவது,
2. உண்மையைக் கண்டறிவது,
3. காணாமற் போனோரைத் தேடுவது,
4. காணாமற் போனவர் அல்லது கொல்லப்பட்டவரின் மிஞ்சியுள்ள உடற் பாகங்களை உரிய முறைப்படி அடக்கம் செய்வது அல்லது தகனம் செய்வது,
5. குற்றம் செய்தவர்களுக்கு நீதி மற்றும் நிர்வாக ரீதியிலான தடைகளை ஏற்படுத்துவது,
6. குற்றமிழைத்தவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பது,
7. இறந்தவர்களையும், காணாமற் போனவர்களையும் நினைவு கூர்வதும்,
8. இறந்தவர்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான ஞாபகங்களைப் பேணுவதும்.

எனவே நிலைமாறுகால நீதியின் ஒரு பகுதியாகக் காணப்படும் இழப்பீட்டுக்கான நீதி என்ற பிரிவின் கீழ் தமிழ் மக்கள் நினைவு கூருவதற்கும், ஞாபகங்களைப் பேணுவதற்கும் முழு உரித்துடையவர்கள் ஆகும். அது முதலாவதாக அவர்களுடைய அரசியல் கூட்டுரிமையின் பாற்பட்டதாகும். இரண்டாவதாக குறிப்பாக அது ஒரு பண்பாட்டுரிமை. மூன்றாவதாக உளவியல் நிபுணர்கள் கூறுவது போல அது ஒரு கூட்டுச் சிகிச்சையுமாகும். வெளிப்படுத்தப்படாத அடக்கப்பட்ட துக்கமானது கூட்டு மனவடுவாக மாறுகின்றது. அல்லது கூட்டுக் கோபமாக மாறுகின்றது.

**விலை: ரூபா 20.00**